جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்



# மஸ்ஜிதுல் அக்ஸாவின் சிறப்புகள்

தொகுப்பாளர் : அஷ்ஷைக் அஸ்ஹர் யூஸுஃப் ஸீலானி

அழைப்பாளர் – அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம், தமிழ் பிரிவு

Scanned with CamScanner

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மஸ்ஜித் அல் அக்ஸா

## அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றுப்புறங்களை உடையது

سُبۡحٰنَ الَّذِیۡۤ اَسۡرٰی بِعَبۡدِہٖ لَیۡلًا مِّنَ الۡمَسۡجِدِ الۡحَرَامِ
اِلَی الۡمَسۡجِدِ الۡاَقۡصَا الَّذِیۡ بٰرَکۡنَا حَوۡلَہٗ لِنُرِ
یَہٗ مِنۡ اٰیٰتِنَا ؕ اِنَّہٗ ہُوَ السَّمِیۡعُ الۡبَصِیۡرُ

**(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன். அவன் தன் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான். (மஸ்ஜிதுல் அக்ஸாவின்) சுற்றுப்புறங்களை நாம் அபிவிருத்தி செய்திருக்கின்றோம். நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காக (அவ்வாறு அழைத்துச் சென்றோம்). நிச்சயமாக அவன் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், பார்ப்போனாகவும் இருக்கின்றான்.**



**திருக்குர்ஆன் 17:01**

Scanned with CamScanner

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخير

# மஸ்ஜித் அல் அக்ஸா

## உலகின் இரண்டாவது மஸ்ஜித்

நான் (நபி (ﷺ) அவர்களிடம்), “அல்லாஹ்வின் தூதரே! பூமியில் முதன் முதலாக அமைக்கப்பட்ட பள்ளிவாசல் எது?” என்று கேட்டேன். அவர்கள், (மக்கா நகரிலுள்ள) அல் மஸ்ஜிதுல் ஹரம்” என்று பதிலளித்தார்கள்.

நான், “பிறகு எது?” என்று கேட்டேன். அவர்கள், “(ஜெரூஸலேமில் உள்ள) அல்மஸ்ஜிதுல் அக்ஸா என்று பதிலளித்தார்கள்.

நான், “அவ்விரண்டுக்கும் இடையே எத்தனை ஆண்டுகள் (இடைவெளி) இருந்தது?” என்று கேட்டேன். அவர்கள், நாற்பது ஆண்டுகள் (என்றார்கள்).



பிறகு, “நீ தொழுகை நேரத்தை எங்கு அடைந்தாலும் உடனே, அதைத் தொழுதுவிடு. ஏனெனில், நேரப்படி தொழுகையை நிறைவேற்றுவதில் தான் சிறப்பு உள்ளது” என்றும் சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: அபூதர் (ரலி) அவர்கள், புஹாரி 3366

Scanned with CamScanner

# பைத்துல் முகத்தஸ்

## முஸ்லிம்களின் முதல் கிப்லா

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் மதீனா நகருக்கு வந்தபோது பைத்துல் முகத்தஸ் நோக்கி பதினாறு அல்லது பதினேழு மாதங்கள் தொழுதார்கள்.

(தொழுகையில்) கஅபாவை நோக்கி முகம் திருப்புவதையே அவர்கள் விரும்பிவந்தார்கள். ஆகவே, உயர்ந்தோன் அல்லாஹ்

**"(நபியே!) உம்முடைய முகம் (அடிக்கடி) வானத்தின் பக்கம் திரும்புவதை நாம் காண்கிறோம். எனவே, நீர் விரும்பும் கிப்லா(வாகிய கஅபா)வின் பக்கம் உம்மைத் திடமாக திருப்பிவிடுகிறோம்"**

எனும் (அல்குர்ஆனின் 2:144 ஆவது) வசனத்தை அருளினான். இவ்விதம் (தொழுகையிலிருந்தபோதே) கஅபாவை நோக்கி முகம் திருப்பப்பட்டார்கள். அந்த அஸர் தொழுகையில் நபி (ﷺ) அவர்களுடன் ஒரு மனிதர் தொழுதார்.

அவர் (மஸ்ஜிதில் இருந்து) வெளியேறி அன்சாரிகளில் ஒரு குழுவினரைக் கடந்து சென்றபோது, "நபி (ஸல்) அவர்களுடன் தாம் தொழுததாகவும், (தொழுகையிலேயே) அவர்கள் முகம் கஅபாவை நோக்கித் திருப்பப்பட்டதாகவும் தாம் சாட்சியம் அளிப்பதாகச் சொன்னார்.



உடனே அம்மக்கள் அஸர் தொழுகையில் ருகூஉ செய்துகொண்டிருந்த நிலையில் அப்படியே கஅபாவை நோக்கித் திரும்பிக் கொண்டார்கள்.

அறிவிப்பாளர்: பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள்,
புஹாரி 7252

Scanned with CamScanner

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# பைத்துல் முகத்தஸ்

## பைத்துல் முகத்தஸின் அருகில் உயிர் பிரிய விரும்பிய மூஸா(அலை)

உயிர் பறிக்கும் வானவர் ஒருவர் நபி மூஸா (அலை) அவர்களிடம் அனுப்பப்பட்டார். அவர் வந்தபோது மூசா (அலை) அவர்கள், அவரை அறைந்து விட்டார்கள்.

உடனே அவர் தம் இறைவனிடம் திரும்பிச் சென்று, "(இறைவா!) இறக்க விரும்பாத ஓர் அடியாரிடம் நீ என்னை அனுப்பிவிட்டாய்" என்றார்.

அந்த வானவருக்கு மீண்டும் கண்ணைக் கொடுத்த இறைவன், "நீர் அவரிடம் திரும்பிச் சென்று, அவரை ஒரு காளை மாட்டின் முதுகில் கையை வைக்கச்சொல்லி, அவரது கை எத்தனை முடிகளை மறைக்கின்றதோ அதில் ஒவ்வொரு முடிக்குப் பகரமாக ஓர் ஆண்டு அவர் உயிர் வாழலாம் என்று கூறுவீராக!" என அனுப்பிவைத்தான்.

(அவ்வாறே கூறிய போது) மூஸா (அலை) அவர்கள், "இறைவா, அதற்குப் பிறகு?" எனக் கேட்டதும் அல்லாஹ், "பிறகு மரணம் தான்" என்றான்.

உடனே மூஸா (அலை) அவர்கள், "அப்படியானால் இப்பொழுதே (தயார்)" எனக் கூறிவிட்டு, அல்லாஹ் விடம் (பைத்துல் முகத்தஸ் எனும்) புனிதத் தலத்திலிருந்து கல்லெறியும் தூரத்திலுள்ள இடத்தில் தமது உயிரைக் கைப்பற்றுமாறு வேண்டிக் கொண்டார்கள்.

மேலும் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறும்போது, "நான் மட்டும் இப்போது அங்கு இருந்தால், அந்த செம்மணற்குன்றுக்கு அருகில் சாலையோரத்தில் மூஸா (அலை) அவர்கள் அடக்கப்பட்டிருக்கும் இடத்தை உங்களுக்குக் காட்டியிருப்பேன்" எனக் குறிப்பிட்டார்கள்.



**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புஹாரி 1139**

Scanned with CamScanner

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخـبـر

# மஸ்ஜித் அல் அக்ஸா

## பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்ட மூன்று புனித மஸ்ஜித்களில் ஒன்று

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

(மக்காவில் உள்ள) மஸ்ஜிதுல் ஹறம், (மதீனாவில் உள்ள) மஸ்ஜிதுந் நபவீ, (பைத்துல் முகத்தஸில் உள்ள) மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று பள்ளிவாசல்களுக்குத் தவிர வேறு எந்தப் பள்ளிவாசலுக்கும் (அதிக நன்மையை எதிர்பார்த்துப்) புனிதப் பயணம் மேற்கொள்ளப்படக் கூடாது.



அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புஹாரி 1189

Scanned with CamScanner

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر


# பைத்துல் முகத்தஸ்

## அல்லாஹ் நபி(ﷺ) அவர்களுக்கு காட்சியளிக்கச் செய்த மஸ்ஜித்

**அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.**

**(நான் இரவின் சிறு பகுதியில் புனித கஅபாவிலிருந்து பைத்துல் முகத்தஸ் வரை சென்று வந்த தகவலைச் சொன்ன சமயம்) குறைஷியர் என்னை நம்ப மறுத்தனர்.**

**அப்போது நான் (கஅபாவில்) "ஹிஜ்ர்" எனும் (வளைந்த பகுதியில் நின்றிருந்தேன். அல்லாஹ் எனக்கு அப்போது பைத்துல் முகத்தஸை காட்சியளிக்கச் செய்தான். உடனே நான் அதைப் பார்த்தபடியே அதன் அடையாளங்களைக் குறைஷியருக்கு விவரிக்கலானேன்.**



**அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 276**

Scanned with CamScanner

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# பைத்துல் முகத்தஸ்

## விண்ணுலகப் பயணத்திற்கு முன் நபி(ﷺ) அவர்கள் இரண்டு ரக்அத்துகள் தொழுத மஸ்ஜித்

**அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள். (விண்ணுலகப் பயணத்தின்போது) என்னிடம் கோவேறு கழுதையை விடச் சிறியதும், கழுதையை விடப் பெரியதுமான வெள்ளை நிறத்திலமைந்த நீளமான புராக் எனும் (மின்னல் வேக) வாகனம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அது பார்வை எட்டுகிற தூரத்திற்குத் தனது கால் குளம்பை எடுத்து (எட்டு) வைக்கும். அதிலேறி நான் பைத்துல் முகத்தஸ் இறை ஆலயம் வரை சென்றேன்.**

**பிறகு இறைத்தூதர்கள் தமது வாகனத்தைக் கட்டி வைக்கும் வளையத்தில் எனது வாகனத்தைக் கட்டிவைத்துவிட்டு அந்த இறையாலயத்திற்குள் நுழைந்து இரண்டு ரக்அத்கள் தொழுதேன். (நீண்ட ஹதீஸின் ஒரு பகுதி)**



**அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள். முஸ்லிம் 259**

Scanned with CamScanner

# பைத்துல் முகத்தஸ்

## நபி (ﷺ) அவர்கள் நபிமார்களுக்கு இமாமாக இருந்து தொழுகை நடத்திய மஸ்ஜித்

### அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

நான் (கஅபாவில்) ஹிஜ்ர் எனும் (வளைந்த) பகுதியில் இருந்தேன். நான் பயணம் மேற்கொண்டது பற்றி என்னிடம் குறைஷியர் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பைத்துல் முகத்திஸிலுள்ள சில பொருட்களைப் பற்றி என்னிடம் அவர்கள் கேட்டனர். ஆனால், அவை என் நினைவில் இருக்கவில்லை. அப்போது நான் மிகவும் வருந்தினேன். முன்பு எப்போதும் அந்த அளவுக்கு நான் வருந்தியதேயில்லை.

உடனே அல்லாஹ் பைத்துல் முகத்தஸை எனக்குக் (காட்சியாகக்) காட்டினான். அதைப் பார்த்துக்கொண்டே அவர்கள் கேட்ட ஒவ்வொன்றுக்கும் (சரியான) தகவல் தெரிவித்தேன்.

(பைத்துல் முகத்தஸில்) இறைத்தூதர்களில் ஒரு குழுவினர் இருந்தனர். அங்கு மூஸா (அலை) அவர்கள் நின்று தொழுதுகொண்டிருந்தார்கள். அவர்கள் (யமனியர்களான) ஷனூஆ குலத்தைச் சேர்ந்த மனிதரைப் போன்று (உயரமாக) திரண்ட உடல் உள்ள மனிதராக இருந்தார்கள்.

அங்கு மர்யமின் மைந்தர் ஈஸா(அலை) அவர்களும் நின்று தொழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் மனிதர்களிலேயே (என் தோழர்) உர்வா பின் மஸ்ஊத் அஸ்ஸகஃபீ அவர்களுக்கு மிக நெருக்கமான சாயலுடையவராக இருந்தார்கள்.

அங்கு இப்ராஹீம் (அலை) அவர்களும் நின்று தொழுதுகொண்டிருந்தார்கள். மக்களில் அவர்களுக்கு மிக நெருக்கமான சாயல் உடையவர் உங்கள் தோழர் (நான்)தான்.

அப்போது தொழுகையின் நேரம் வந்துவிடவே இறைத்தூதர்களுக்கு நான் தலைமை தாங்கித் தொழுகை நடத்தினேன்.தொழுது முடித்தபோது (என்னிடம்) ஒருவர், "முஹம்மதே! இதோ இவர்தாம் நரகத்தின் காவலர் மாலிக். அவருக்கு ஸலாம் சொல்லுங்கள்! என்று கூறினார். நான் அவரை நோக்கித் திரும்பிய போது அவர் முந்திக் கொண்டு எனக்கு ஸலாம் சொல்லிட்டார்.

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 278**

Scanned with CamScanner

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# பைத்துல் முகத்தஸ்

## மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு தொழுகையை நாடி வருபவருக்கு கிடைக்கும் சிறப்புகள்

ஸுலைமான்(அலை) அவர்கள் பைத்துல் முகத்தஸைக் கட்டிய சந்தர்ப்பத்தில் அல்லாஹ்விடம் மூன்று பிரார்த்தனைகளை செய்தார்கள்.

1. தனது தீர்ப்பு அல்லாஹ்வுடைய தீர்ப்புக்கு உடன்பாடானதாக அமைய வேண்டுமென பிரார்த்தித்தார்கள் அது அவருக்கு வழங்கப்பட்டது.

2. எனக்குப் பின்னர் யாருக்கும் வழங்கப்படாத ஒரு ஆட்சியைக் கேட்டார்கள். அது அவருக்கு வழங்கப்பட்டது.

3. மஸ்ஜிதைக் கட்டி முடித்த பின் இந்த மஸ்ஜிதுக்கு யார் தொழுகையை நாடி வருவாரோ அவர் அன்று பிறந்த பாலகனைப் போன்று பாவங்களிலிருந்து வெளியேற வேண்டுமென பிரார்த்தித்தார்கள்.



அந்தப் பிரார்த்தனையும் ஒப்புக் கொள்ளப்பட வேண்டுமென நான் ஆதரவு வைக்கின்றேன் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், இப்னு மாஜா 1408, நஸாயீ 693, அஹ்மத் 6644.

Scanned with CamScanner

# பைத்துல் முகத்தஸ்

## பைத்துல் முகத்தஸ் வெற்றிக் கொள்ளப்படுதல்

தபூக் போரின்போது நபி(ﷺ) அவர்களிடம் நான் சென்றேன். அவர்கள் ஒரு தோல் கூடாரத்தில் இருந்தார்கள். அப்போது அவர்கள், 'இறுதி நாள் வருவதற்கு முன்பு (அதற்குரிய) ஆறு அடையாளங்கள் நிகழும். அவற்றை எண்ணிக் கொள்:

1. என்னுடைய மரணம்

2. பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்படுதல்.

3. ஆடுகளுக்கு வருகிற (ஒரு வகை) நோயைப் போன்று கொள்ளை நோய் ஒன்று வந்து உங்களைப் பீடிக்கும் (அதனால் ஏராளமானவர்கள் இறந்து போய் விடுவார்கள்)

4. பிறகு செல்வம் பெருகி வழியும். எந்த அளவிற்கென்றால் ஒருவருக்கு நூறு தீனார்கள் கொடுக்கப்பட்ட பின்பும் (அதனை அற்பமாகக் கருதி) அவர் அதிருப்தியுடனிருப்பார்.

5. பிறகு தீமையொன்று தோன்றும். அரபுகளின் வீடுகளில் அது நுழையாத வீடு எதுவும் இருக்காது.

6. பிறகு (ரோமர்களுக்கும்) உங்களுக்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஒன்று ஏற்படும்

(அதை மதிக்காமல்) அவர்கள் (உங்களை) மோசடி செய்து விடுவார்கள். பிறகு உங்களை எதிர்த்துப் போரிடுவதற்காக எண்பது கொடிகளின் கீழே (அணி வகுத்து) அவர்கள் வருவார்கள். ஒவ்வொரு கொடிக்கும் கீழே பன்னிரண்டாயிரம் போர் வீரர்கள் இருப்பார்கள்.



அறிவிப்பவர்: அவ்ஃபு இப்னு மாலிக் (ரலி) அவர்கள், புஹாரி 3176

Scanned with CamScanner